<u>பி.வா.சா.1 ___ பொற்செல்வி ஆஜர், குறுக்கு விசாரணை :-</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். வழ்ககின் வாதி சிதம்பரம் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் அப்பாவின் அத்தை மகன். அவருடைய சொத்துக்களை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அவர் அரசாங்க வேலையிலிருந்து ஓய்வு பெற்று வீட்டில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதிக்கு 73 வயதாகிறது என்றால் சரிதான். அவருக்கு அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போய் இருதய சிகிச்சைக்கு மருத்துவமனை சென்று வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு இருதய சிகிச்சை எடுத்துக்கொண்ட விவரம் எனக்கு நன்றாக தெரியும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 10ம் வகுப்பு எந்த பள்ளியில் படித்தேன் என்றால் விளங்காமுடி பள்ளியில் படித்தேன். என்னை பொதுவாக அழைப்பது செல்வி என்றுதான் அழைப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல பொற்செல்வி என்றுதான் அழைப்பார்கள். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண். 92/2 ஆகும் விஸ்தீரணம் 16 சென்ட் ஆகும். அந்த சொத்துக்களில் என்னென்ன உள்ளது என்றால் தென்னை மரங்கள் உள்ளன வீடு ஒன்று உள்ளது அது தார்சு வீடு. எனக்கு நான் கிரயம் பெற்ற சொத்துக்கள் வேறு ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. குடும்ப சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. கிரயம் செய்யப்பட்டதாக சொல்வதற்கு முன்பு பிரதிவாதி அவருடைய மருத்துவ சிகிச்சைக்காக என்னிடம் வந்து கடன் கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த தேதியில் பிரதிவாதியிடம் பேசினேன் என்றால் 30.11.2011ம் தேதியில் பேசினேன் எங்கு வைத்து பேசினேன் என்றால் வாதியின் வீட்டில் வைத்துதான் பேசினேன். நாங்கள் பேசியபோது யார் யார் உடனிருந்தனர் என்றால் யாரும் இல்லை நாங்கள் இருவர் மட்டும்தான் பேசினோம். என்ன

பேசினோம் என்றால் சிதம்பரம் அவருடைய சொத்தை விற்பதாக சொன்னார் நான் வாங்கிக்கொள்வதாக சொன்னேன். அப்போது வேறு யரும் இல்லையா என்றால் இல்லை. வாதி கூட்டுக்குடும்பமாகத்தான் மனைவி மக்களுடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அனைரும் அதே வீட்டில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால் 20.12.2011ம் தேதியில் ரூ.52,000ம் கொடுத்தேன். 30.11.2011ம் தேதியில் என்ன பெசினோம் என்றால் நிலத்தை விற்பதாக சொன்னவுடன் ஒரு செனட் ரூ.22ஆயிரம் வீதம் பேசினோம் அதற்கான ஒப்புந்தம் ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் ஏற்படுத்திக்கொண்டோம். அந்த ஒப்பந்தத்தை யார் எழுதியது என்றால் ஒப்பந்தம் எதுவும் எழுதப்படவில்லை வாய்மொழியாகத்தான் பேசினோம். அன்றையதினம் எவ்வளவு முன்பணம் செலுத்தினேன் என்றால் ரூ.52,000/-ம் செலுத்தினேன். மீதி பணம் எவ்வளவு என்றால் ரூ.3 லட்சம் ஆகும். அதை 20.2.2012ம் தேதியில் கொடுத்து கிரயம் செய்துக்கொண்டேன். வாதிக்கு நான் கொடுத்த பணம் குறித்து வேறு யாருக்கும் தெரியாது என்றால் வாதியின் குடும்பத்தினருக்கு தெரியும் மற்ற யாருக்கும் தெரியாது. என்னுடைய வீட்டிற்கும் வாதியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 தோப்புகள் தள்ளியிருக்கும். 30.11.2011ம் தேதியில் நாங்கள் பேசியபோது சொத்திற்குண்டான ஆவணங்கள் குறித்து கேட்டு தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். வாதி என்னிடம் பணம் கேட்டபோது சொத்தை பொறுத்து ஆவணங்கள் எழுதிக்கொடுத்தால்தான் நான் பணம் கொடுப்பேன் என்று சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. வாதியிடம் சொத்தின் விவரங்களை அறிந்துக்கொண்ட நான் பத்திரத்தை தயார் செய்தேன் என்றால் நாங்கள் இருவரும் சென்றுதான் எழுதினோம். யார் பத்திரம் எழுதியது என்றால் துரை. அவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் சொத்தை பொறுத்து பத்திரம் எழுதவேண்டும் என்று

துரையை சந்தித்து பேசினேனா என்றால் பேசினேன். எந்த தேதியில் சென்று பேசினேன் என்றால் 20.02.2012ம் தேதியில் பேசினேன். எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 12 மணிக்கு சென்றேன். துரையை எங்கு சென்று பார்த்தேன் என்றால் அவர் அலுவலகத்தில் சென்று பாாத்தேன். என்னுடன் யாரும் வரவில்லை என்றால் சரிதான். நான் ஒருநாள் முன்பே சென்று பத்திரம் தயார் செய்யச்சொல்லி முத்திரைதாள்கள் வாங்கச்சொல்லி கொடுத்துவிட்டு வந்துவிட்ட அதன்பிறகு அடுத்தநாள் சென்று பார்த்தோம். நான் கூறியபடி துரை பத்திரத்தை தயார் செய்து வைத்திருந்தார் என்றால் சரிதான். நான் தயார் செய்திருந்த ஆவணத்தில்தான் கையொப்பமிட்டால்தான் நான் பணம் கொடுப்பதாக சொன்னதால் வாதி கையொப்பமிட்டார் என்றால் நான் கடனாக கொடுக்கவிவல்லை அதற்கு முன்பே பணத்தை வாங்கிச்சென்றுவிட்டார். என்னுடைய கிரய பத்திரத்தில் வாதியுடன் ஏற்கனவே 30.11.2011 சென்று சந்தித்து கிரயம் பேசியதாகவும் அன்றே முன்பணம் ரூ.52 ஆயிரம் செலுத்தியதாகவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த விவரத்தை என்னுடைய பதிலுரையில் கூறவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். அந்த விவரத்தை என்னுடைய பதிலில் கூறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேய ஒருவரிடம் கிரயம் பெற்றார் கிரயம் வாங்குபவரிடம்தான் அசல் பத்திரம் இருக்கும் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றதாக சொல்லும் அசல் ஆவணம் என்னிடம் இல்லை என்றால் வாதிதான் பட்டா மாற்றிதருவதாக வாங்கிசென்றார். எந்த தேதியில் என்னிடம் வாங்கிச்சென்றார் என்றால் 2013ம் ஆண்டு வாங்கிச்சென்றார். எந்த தேதி என்றால் 7ம் மாதம் வாங்கிச்சென்றார் தேதி நினைவில்லை. எதற்காக வாங்கிச்சென்றார் என்றால் வாதி என்னுடைய பெயரில் பட்டா மற்றிதருவதாக வாங்கிச்சென்றார். ஒரு உரிமை ஆவணம் ஏற்படும்போதே பட்டா மாற்றத்திற்கான விண்ணப்பத்தையும்

அதற்கான தொகை செலுத்தி விண்ணப்பத்திடுவோம் என்றால் சரிதான். உரிமை மாற்றம் ஏற்பட்ட பின்பு வட்டாட்சியர் அலுவலகத்தில் கிரயம் பெற்றவர்கள்தான் அணுகி பட்டா மாற்றம் செய்ய முயற்சிப்பார்கள் என்றால் சரிதான். நான் பட்டா மாற்றம் கோரி ஏதாவது மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் எந்த ஆண்டு என்றால் 2018ம் அண்டு கொடுத்தேன். வாதி இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னர்தான் அந்த மனுவை கொடுத்தேன் என்றால் சரிதான் வாதி மாற்றிக்கொடுக்காததால் நான் செய்தேன். என் பெயர் ஏற்பட்ட கிரய ஆவணத்தில் பட்டாவை வாதிதான் மாற்றிக்கொடுக்கவேண்டும் என்று எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பட்டாவை எத்தனை நாட்களில் மாற்றி தருவதாக என்னிடம் கூறினார் என்றால் வாதி ஒருமாதத்தில் மாற்றிதருவதாக கூறினார். வாதி இவ்வழக்கை தாக்கல் செய்யும்வரை பட்டா மாற்றம் குறித்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் அசல் பத்திரத்தை ஒப்படைக்கும்படி கூறவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்து உள்ள வீட்டில் வாதியும் அவர் குடும்பத்தாரும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த 16 செண்ட்டில்தான் அந்த வீடு உள்ளது என்றால் சரிதான். நிலத்தையும் வாதிதான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான்தான் அனுபவித்து வருகிறேன். வீட்டை 3 மாதங்களில் காலி செய்வதாக சொன்னார். நிலம் மொத்தம் எத்தனை செண்ட் என்றால் 16 செண்ட் ஆகும். அதில் வீடு எத்தனை செண்ட் என்றால் நிலத்தில்தான்வீடு உள்ளது. விஸ்தீரணம் தெரியாது. கிரயப்பத்திரத்தில் வாதியிடம் கையொப்பம் பெற்று பதிவு செய்தபின்னிட்டு நான் வீட்டிற்குதான் சென்றேன் என்றால் சரிதான். அதற்குபின்னிட்டு வழக்கு சொத்திடம் வந்ததில்லை என்றால் போய்கொண்டுதான் இருக்கிறென். வாதி என்னிடம் அசல் வட்டியும் செலுத்தும்போது ஒவ்வொருமுறையும் எழுதி கையொப்பமிட்டுள்ளேன் என்று

சொன்னால் இல்லை என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 டைரியில் 28.11.2011 முதல் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளது என்னுடைய கையெழுத்து என்று சொன்னால் என்னுடையதல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு வழக்கறிஞரிடமிருந்து சட்டஅறிவிப்பு வந்தது என்றால் சரிதான். அதைநான் வாங்கிக்கொண்டேன் என்றால் சரிதான். அந்த சட்டஅறிவிப்பிலேயே தனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் ரூ.1 லட்சம் கடன் பெற்றதாகவும் அதற்காக என் பெயரில் கிரய ஆவணம் எழுதிக்கொடுத்ததாகவும் அவ்வப்போது அசல் மற்றும் வட்டியை செலுத்தி அதற்காக நான் டைரியில் எழுதிக்கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. அந்த சட்டஅறிவிப்பிற்கு நான் பதில் எதுவும் இதுநாள் வரை கொடுக்கிவல்லை என்றால் என் வழக்கறிஞர் தேவையில்லை என்று சொன்னதால் நான் கொடுக்கவில்லை. அந்த சட்ட அறிவிப்பில் உண்மை இருப்பதால்தான் நான் பதில் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.